செ.வெ.எண்: 45 நாள்:20.11.2019

**கரூர் மாவட்டம்**

**94 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் டிராக்டர் வாகனங்கள் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் அரவக்குறிச்சி மற்றும் புகளூர் வட்டங்களுக்குட்பட்ட 2,560 பயனாளிகளுக்கு ரூ.21.32 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வட்டங்கள் வாரியாக வழங்கும் விழா நடைபெற்றது. அதில் இன்று (20.11.2019) காலை அரவக்குறிச்சி வட்டத்திற்குட்பட்ட 1,537 பயனாளிகளுக்கு ரூ.1239,83,318 மதிப்பிலும், மாலை புகளூர் வட்டத்திற்குட்பட்ட 1,023 பயனாளிகளுக்கு ரூ.8,92,26,887 மதிப்பிலுமான நலத்திட்ட உதவிகளை திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

கிராமப்புறங்களில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கு அனைத்து வகையான நலத்திட்டங்களும் சென்றடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், மக்கள் பிரதிநிதிகள் கிராமம் கிராமமாகச் சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, அம்மனுக்களின் மீது உடனடி தீர்வு கண்டு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், இரண்டு மாத காலமாக கரூர் மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளுக்கும் சென்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியுடைய பயனாளிகளுக்கு முதற்கட்டமாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

கரூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு மக்கள் குறைதீர்க்கும் திட்டத்தின் கீழ் 35,327 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 23,939 மனுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. இதில் 8,000 பேருக்கு முதியோர் மற்றும் விதவை உதவித்தொகைகள் வழங்கப்படவுள்ளது. 11,388 நிராகரிக்கப்பட்டுள்ளது. நிராகரிக்கப்பட்டுள்ள மனுக்களை மீள்விசாரணை செய்யப்படவுள்ளது. முதியோர் உதவித்தொகை பெறும் பயனாளிக்கு ரூ.50,000க்குள் சொத்து மதிப்பு இருக்க வேண்டும் என்ற விதிகளை தளர்த்தி மாற்றி, ரூ.1லட்சம் வரை சொத்துமதிப்பு உள்ளவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்கலாம் என்ற உத்தரவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார். அதனடிப்படையில், தற்போது நிகாரிக்கப்பட்டுள்ள மனுக்களை மறுபடியும் விசாரணை செய்து தளர்த்தப்பட்ட விதிகள் பொருந்தும் நபர்களுக்கும் விரைவில் முதியோர் மற்றும் விதவை உதவித்தொகை கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான அனைத்து திட்டங்களையும் மாண்புமிகு தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்து செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அனைத்து திட்டங்களையும், அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சிறப்பாக நடத்தி வருகின்றார்கள்.

அதனடிப்படையில், மாணவ-மாணவிகளின் நலன் கருதி தனியார் பள்ளிக்கு இணையான விலையில்லா வண்ணச்சீருடைகள், விலையில்லா பாடப்புத்தகங்கள், காலணிகள், புத்தகப்பை, மிதிவண்டி, மடிக்கணினி, கல்வி உபகரணங்கள் என 14 வகையான சிறப்புத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் இதுவரை 46.79 லட்சம் மாணவ-மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.

1500 மெகாவாட் அளவிலான மின்உற்பத்தியை செயல்படுத்திக்காட்டி, அனைவருக்கும் மாதந்தோறும் 100 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்கப்படும் என்று அறிவித்து செயல்படுத்தி, தமிழகத்தை மின்மிகை மாநிலமாக மாற்றிக்காட்டியவர் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்கள்.

ஆட்சிக்கு வந்தால், குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லாமல் அரிசி வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்தி முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் போட்ட முதல் கையெழுத்தே, அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ அரிசி இலவசம் என்பதே ஆகும். மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சர்க்கரை குடும்ப அட்டையினை அரிசிக்கான குடும்ப அட்டையாக மாற்றிக்கொள்ளலாம் என்ற அறிவிப்பினை நேற்று அறிவித்திருக்கின்றார்கள்.

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வணிக வளாகங்களுக்கு 100 சதவீதமும், குடியிருப்புகளுக்கு 50 சதவீதமும் கூடுதலாக வரி வசூல் செய்யும் முறையை நிறுத்தி வைத்து, இந்த வரி வசூல் தொகையினை மறுபரிசீலனை செய்தற்காக ஒரு குழுவை நியமித்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

கரூர் மாவட்டத்தில் உள்ள விவாசயிகளின் நலன் கருதி 94 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தொகையில் டிராக்டர் வாகனங்களை வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். விரைவில் அனைவருக்கும் டிராக்டர் வாகனங்கள் வழங்கப்படும். அதுமட்டுமல்ல,

விவசாயப்பெருங்குடி மக்களுக்கு 10ஆயிரம் கோடி ரூபாயை இலக்கீடாக வைத்து பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

நமது கரூர் மாவட்டத்திற்கு சுமார் ரூபாய் 249 கோடி மதிப்பில் மருத்துவக்கல்லூரியை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். தமிழகத்தில் வேறு எங்கும் இல்லாத வகையில் கரூர் அரசு மருத்துவக்கல்லூரியில் 300 வாகனங்களை தரைமட்டத்திற்கு கீழே நிறுத்தும் வகையில் கட்டடத்தின் அமைப்பு வடிவமைக்கப்பட்டது. இதற்கென்று கூடுதலாக செலவுஆகும் என்ற நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக ரூ.40கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மேலும் கூடுதலாக படுக்கை வசதிகள் அமைக்கவும் நிதி ஒதுக்கினார்கள். தற்போது சுமார்.ரூ.300 கோடி மதிப்பில் எழிலார்ந்த அனைத்து வசதிகளுடனும் கூடிய மருத்துவக்கல்லூரி நமது மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது. தமிழகத்திலேயே கரூர் மாவட்ட மருத்துவக்கல்லூரியில்தான் தரைதளத்திற்கு கீழே வாகனங்கள் நிறுத்தும் வசதி இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அரவக்குறிச்சிக்குட்பட்ட பகுதி மக்களுக்கு ரூ.250கோடி மதிப்பில் கூட்டுக்குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. புகளூர் பகுதியில் காவிரி ஆற்றின்குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தோம், உடனடியாக உரிய அலுவலர்களை அனுப்பி ஆய்வு செய்ய உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ.490கோடி மதிப்பில் கதவணை அமைக்கவே ஆணையிட்டுள்ளார்கள்.

புகளுர் பகுதி மக்களின் 50 ஆண்டுகால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், புகளுரை தனி வட்டமாக உருவாக்கி உத்தரவிட்டவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். 18 ஆண்டுகளுக்குப்பிறகு, க.பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆத்துப்பாளையம் அணையில் நல்ல நீரைத்தேக்கி நொய்யல் வாய்க்காலில் தண்ணீர் திறக்க உத்தரவிட்டவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். கிட்டத்தட்ட ஓராண்டு கால முயற்சிக்குப்பின், நீதிமன்றத்தில் இருந்த வழக்குகளை சுமூகமாக தீர்த்து, பொதுமக்களின் நலன் கருதி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதுமட்டுமல்ல நொய்யல் வாய்க்கால் முழுவதையும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைஉறுதியளிப்புத்திட்டத்தின் கீழ் துார்வாரப்பட்டு, இன்று கடைமடை வரை தண்ணீர் சென்றுகொண்டிருக்கின்றது. இதனால் சுமார் 29,500 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கீழ் பவானி வடிநிலக்கோட்டத்தின் மூலம் கரூர் மாவட்டத்தில் சுமார் 4,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றது. கீழ் பவானி அணையில் இருந்து போதிய நீர் திறக்காததால் பாசனம் செய்ய இயலாத நிலை இருக்கின்றது என்ற பொதுமக்களின் கோரிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறியவுடன் உடனடியாக பொதுப்பணித்துறை அலுவலர்களை அழைத்து, கரூர் மாவட்டத்தில் உள்ள நிலங்கள் பயன்படும் வகையில் கீழ்பவாணி அணையில் இருந்து நீரை திறந்து விடவேண்டும் என்று உத்தரவிட்டார்கள். நீர் திறக்கப்பட்டது. கீழ்பவானி அணையில் இருந்து நீர் வெளியேற்றப்படுவது நிறுத்தப்படும் நாளில், அஞ்சூர் மற்றும் கார்வழி பகுதி மக்கள் நெல்பயிர்கள் முற்றும் நிலையில் நீர் நிறுத்தப்படவுள்ளது, எனவே, கூடுதலாக 20 நாட்கள் நீர் திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்று, இந்த கோரிக்கையினை கூறியவுடன் விவசாயிகளின் நலன் கருதி கூடுதலாக 20 நாட்கள் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி என்ற காரணத்தால் விவசாயப்பெருங்குடி மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கான திட்டங்களை வழங்கி வருகின்றார்கள். மாண்புமிகு அம்மாவின் ஆசியோடு நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் நன்றியுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்நிகழ்ச்சிகளில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.ம.கீதா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, கரூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வ.சந்தியா, சமூகப்பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.பாலசுப்பிரமணியம், திருச்சிராப்பள்ளி மத்திய கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.ஏ.ஆர்.காளியப்பன், இயக்குநர் திரு.ஆலம்தங்கராஜ், கரூர் நகராட்சி ஆணையர் திருமதி.சுதா, கலால் பிரிவு உதவி ஆணையர் திருமதி.மீனாட்சி, கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைத் தலைவர் திரு.நெடுஞ்செழியன், மாவட்ட கூட்டுறவு அச்சகத்தலைவர் திரு.மார்க்கண்டேயன், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தலைவர்கள் திரு.வி.சி.கே.ஜெயராஜ் (கரூர்), அரவக்குறிச்சி தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தலைவர் திரு.குருசாமி, கரூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தலைவர் திரு.எம்.எஸ்.மணி, கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் திரு.கமலகண்ணன், திரு.பொரணி கணேசன், திருமதி.மோ.ரேணுகா, திருமதி. மல்லிகா, திரு.தமிழ்நாடு செல்வராஜ், வட்டாட்சியர்கள் திரு.செந்தில் (அரவக்குறிச்சி), திரு.சிவக்குமார்(புகளுர்) உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.